PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

# புதுச்சேரியின் இசை வரலாறு

**நெறியாளர்**

**முனைவர் ச. முரளி   க. உஷா**

**தவில் உதவிப்பேராசிரியர்  முனைவர் பட்ட ஆய்வாளர்**

**இசைத்துறை ,அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

**திரவு சொற்கள்**

புதுச்சேரி, இசை, காரைக்கால் அம்மையார், மாகாகவி பாரதியார், பாரதிதாசன், இரா. திருமுருகன்

**ஆய்வு நோக்கம்**

புதுச்சேரியில் பழமையான கலைகளுள் ஒன்றான இசைக்கலை பரவலாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சிக்கு முன்னோடியாக உள்ள இசை வரலாற்றைப் பற்றி அறிந்துக்கொள்வதற்கும், புதுச்சேரியில் தமிழிசையோடு கர்நாடக இசையும் இணைந்து வளர்ந்திருக்க வேண்டும் என்று அறியமுடிகிறது. எனவே இந்த இசை வளர்ச்சிக்குப் புதுச்சேரியின் பங்கு என்ன என்று அறிந்து கொள்ளும் வகையில் இவ்வாய்வு கட்டுரை அமைந்துள்ளது.

**இசைத்தமிழ்**

“ஆடல் பாடல் இசையே தமிழே
பண்ணே பாணி தூக்கே முடமே”          (சிலம்பு: அரங்கேற்று : 45-46)

என்னும் சிலப்பதிகார அரங்கேற்று காதை அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் பின்வருமாறு பொருள் உரைக்கிறார்.

ஆடலென்பது எல்லாக் கூத்துக்களும் என்றவாறு.

பாடலென்பது பண்ணல் முதலிய எல்லாப் பாடலியல்பும் என்றவாறு.

இசையென்பது நரப்படைவால் உரைக்கப்பட்ட பதினோராரயிரத்து தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்றாகிய ஆதி இசைகளும் என்றவாறு.

தமிழென்பது வடவெழுத்தொரீஇ வத்த எழுத்தானே உறழ்த்து கட்டப்பட்ட வாக்கியக்கூறுகளும், இயலிசை நாடகமென்று சொல்லப்பட்ட மூவகைத் தமிழ்களும் என்றவாறு.

பண்ணென்பது நரப்படைவால் நிறந்தோன்றப் பண்ணப்படாதின்ற பண்ணும்

பண்ணியற்றிமும் திறமும் திறத்திறமும் என்றவாறு.

பாணி என்பது இருவகைத்தர் விகற்பங்களும் என்றவாறு.

தூக்கு என்பது செந்தூக்கு முதலாய ஏழு தூக்குகளும் என்றவாறு.

முடமென்பது இவற்றின் குற்றங்களும் என்றவாறு.

மேற்கண்டவற்றுள் ஆடல் என்பது நாடகத்தமிழாகும். பாடல், இசை, பண், பாணி, தூக்கு, முடம் ஆகியனவற்றைக் கொண்ட தமிழே இசைத் தமிழாகும். அடியார்க்கு நல்லார் காலம் வரை இயல், இசை, நாடகம் என்னும் மூன்றையும் ஒருசேரப் பெற்றதே தமிழ் என்பதும் முத்தமிழையும் நன்கு கற்று

உணர்ந்தோரே தமிழறிஞர் ஆவர் என்பதும் இவ்வுரையின் மூலம் நன்கு விளங்கும். இசைத்தமிழென்பது பண்ணொடு கலந்தும் தாளத்தொடு கூடியும் இயங்கும் செந்தமிழ்ப் பாட்டுக்களானும் கொடுந்தமிழ்ப் பாட்டுக்களானும் இயன்ற இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களுமாகும் நூல்களின் தொகுதியாம். இதன்கண் கீர்த்தனங்களும், வரிப்பாட்டுக்களும், சிந்து, ஆனந்தக்களிப்பு, கும்மி, தெம்பாங்கு முதலியனவும் அடங்குமென்க. இயற்றமிழ்ச் செய்யுட்கள் இசையெடுத்தாள மறுத்துப் பாடப்படின், அவை' இசைத் தமிழின்பாற் படுமென்க.[1] தமிழிசை வேறு; இசைத்தமிழ் வேறு; தமிழிசை என்பது தமிழர் கண்ட இசை. இசைத்தமிழ் என்பது தமிழ் மொழியின் ஒரு பிரிவுக்குப் பெயர். இது இசைப்பதற்காகவே இயற்றப்பட்ட தமிழ்ப் பாடல்களின் பெயர். இசைத்தமிழில் தமிழிசை உண்டு; ஆனால் தமிழிசையில் இசைத்தமிழ் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இசைத் தமிழுக்குப் பொது விலக்கணங்கள், சிறப்பிலக்கணங்கள் என்ற இருவகையிலக்கணங்கள் உண்டு.[2]

இசையின்பம் அளித்தலையே முக்கிய நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பெற்ற இலக்கியங்கள் இசைத்தமிழ் என்னும் இசைப்பா வகையைச் சேர்ந்தவையாகும். இசையின்பம் மட்டுமின்றி சொற்பொருள் இன்பங்களுக்கும் இதில் இடமுண்டு. தேவாரம், திருவாசகம், நாலாயிரப்பனுவல், திருப்புகழ், கலிப்பா, பரிபாடல் முதலியன இசைத்தமிழ் நூல்கள். இசைத்தமிழ் நூல்களில் இடம் பெற்றுள்ள பாடல்கள் அனைத்தும் இசைப்பா எனப்படும்.

பண்டைத் தமிழ் மரபு வழி நின்று வரலாற்று அடிப்படையிலேயே இசைத்தமிழ் என்ற சொல் இங்கு பயன்படுத்தப்படுகிறது. இன்றையச் சூழலில் தமிழ் அறிவு என்பது இயற்றமிழுடன் சுருங்கி நிற்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். காலப்போக்கில், இசைத்தமிழும் நாடகத்தமிழும் தம் செல்வாக்கையும், தனிச் சிறப்புகளையும் அவ்வப்போது இழந்து நின்றன என்பது வரலாற்று உண்மையாகும். இன்றைக்கும் கூட இசைத்தமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் உரிய இடம் அளிக்கப்படவில்லை என்பதுடன் அவற்றின் பெருமையும் உணரப்படவில்லை என்பது ஒரு கசப்பான உண்மை.

ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலான தொன்மையை உடைய, தனிச் சிறப்புமிக்க, உலகின் பழமையான இசைகளுக்கெல்லாம் முன்னோடியாக விளங்குகின்ற நம் தமிழிசையின் வரலாற்றை உற்று நோக்கினால் இடையிடையே அதன் பெருமையை இருள் சூழ்ந்து கொண்டதைப் புரிந்துகொள்ள முடியும் . இவ்வாறு சூழ்ந்த இருளைப் போக்கி மீண்டும் நிமிர்ந்து நின்ற தமிழிசை தன் வரலாற்றில் மூன்று முறை மறுமலர்ச்சிக் காலத்தைப் பெற்றது. அம்மூன்று முறை ஏற்பட்ட மறுமலர்ச்சியிலும் புதுச்சேரியின் பங்கு மகத்தானது. மிகவும் குறிப்பிடத்தக்கது. இச்செய்தி பலருக்கு வியப்பை ஏற்படுத்தக் கூடும். ஆயினும் இது முற்றிலும் வரலாற்று பூர்வமான உண்மை. தமிழருக்கென்று ஓர் இசைமரபோ, இசையிலக்கணமோ, இசை வரலாறோ இல்லை என்று தமிழ்நாட்டிலேயே பேசப்பட்டு வந்த காலத்தில் உ.வே.சாமிநாதையரின் அரிய முயற்சியால் வெளிவந்த பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், புறநானூறு முதலான பழந்தமிழ் இலக்கியங்களின் “மூலமும் உரையும்” வாயிலாகத் தமிழிசையின் ஈடிணையற்ற வரலாறும் மாட்சியையும் வெளி உலகுக்குத் தெரிய வந்தன. இவற்றின் மூலம் கிடைத்த செய்திகளின் அடிப்படையிலேயே தமிழிசை வரலாறும், இசையியலும், அதன் தொன்மையும் அறுதியிட்டு உறுதி செய்யப்பட்டன. தொல்காப்பியக் காலம் தொடங்கி, சங்க காலம், காப்பியக்காலம் வரை தமிழிசை

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

கோலோச்சிய காலம், இக்காலம் தமிழிசையின் பொற்காலம். இதன் பின்னர் தமிழகத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்கள், சமணர் வருகை, களப்பிரர் ஆட்சி முதலான நிகழ்வுகளால் தமிழரின் இசையும் கூத்தும் செல்வாக்கிழந்து சிதைந்து தேய்ந்தன. ஏறத்தாழ ஆறாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் களப்பிரர் காலம் முடிவிற்கு வந்து, தமிழிசையின் முதல் மறுமலர்ச்சிக் காலம் தொடங்குகிறது.

**முதல் மறுமலர்ச்சி**

"பண் சுமந்த பாடல்கள்" பிறந்த பக்தி இலக்கியக் காலத்தின் தொடக்கத்தை தமிழிசையின் முதல் மறுமலர்ச்சிக் காலம் எனக் குறிப்பிட வேண்டும். இம்மறுமலர்ச்சி இன்றையப் புதுவை ஆட்சிப் பகுதியைச் சேர்ந்த காரைக்காலில் நிகழ்கிறது. தமிழிசை தன் உச்ச நிலையை அடைந்து திகழ்ந்த காலம் பக்தி இலக்கியக் காலம். சங்க காலத்திற்குப் பின் தோன்றிய முதற்பெண்பாற் புலவர் காரைக்காலம்மையாரே ஆவார். அவர்தம் பெயரை "காரைக்கால்பேய்" என்றே தம்முடைய பாடல்களில் குறிப்பிடுகிறார். "காரைக்கால் பேய் தன் பாடல் பத்தும் பாடி" என்றும், "காரைக்கால் பேய் சொல் பரவுவார்" என்றும் பல இடங்களில் பலவாறாகக் குறிப்பிடுகிறார்.

தமிழிசை முழுக்க முழுக்கப் பண்ணிசையாக உருப்பெற முதன் முதல் அடித்தளம் இட்டவர் காரைக்காலம்மையார். இவர் படைத்த இலக்கியங்களாக நமக்குக் கிடைத்திருப்பவை திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் "திருவிரட்டை மணிமாலை" "அற்புதத் திருவந்தாதி" ஆகியன. அம்மையார், 'பத்துப்பாடல்களின் தொகுப்பாய் அமைந்த பதிகம்" பாடும் முறையை தமிழிலக்கிய மரபாகத் தொடங்கி வைத்தவர். எனவே தான் இவருடைய பாடல்கள் "மூத்த திருப்பதிகம்" எனப் பெயரிடப்பட்டன. இவருடைய படைப்புகள் யாவும் ஐயம் திரிபற (இசைத்தமிழைச் சார்ந்தனவே. தமிழ்த் திருமுறை இசை மரபில் முதற்பண்ணாகப் போற்றப்படுவது "நைவளம்" அதுவே, திருமுறையில் (தேவாரம்) நட்டபாடை எனப் பெயர் பெற்று இன்றைய கருநாடக இசையில் கம்பீர நாட்டை என்றாயிற்று. முதன் முதலில், "கொங்கை திரங்கி நரம் பெழுந்து" எனத் தொடங்கும் தம் முதற் பதிகத்தை நட்டபாடைப் பண்ணில் அமைத்து பண்ணிசை மரபைத் தொடக்கி வைத்தவர் காரைக்காலம்மையார். இதே போன்று, "எட்டி இலவம்" எனத் தொடங்கும் இரண்டாம் பதிகத்தை மற்றொரு பழம் பண்ணான "இந்தளத்தில்" அமைத்தார். இவ்விரண்டு பண்களுமே தமிழில் தோன்றிய ஐந்திசைப் பண்களாகும். எனவே, "ஆதித் தமிழிசை மூவர்" என்றும் "தேவார மூவர்" என்றும் போற்றப்படும் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் அகிய மூவர்க்கும், பிற திருமுறைப் புலவர்கட்கும் முன்னோடியாக விளங்கித் தமிழிசையின் மறுமலர்ச்சியைத் தொடங்கிவைத்தவர் கி.பி. ஆறாம் நூற்றாண்டினரான காரைக்காலம்மையாரே என்பதில் ஐயமில்லை. இவரை யடியொற்றியே ஞானசம்பந்தர் "தோடுடைய செவியன்" எனும் தம் முதல் பாடலை "நட்டபாடை" பண்ணில் அமைத்தார், தமிழிசையின் தனித்தன்மையை இன்றளவும் பறை சாற்றி வரும் திருமுறை இசைக்கு வித்திட்டு மூத்த திருப்பதிகம் பாடியதுடன், சங்க நூல்களில் காணப்படுவது போன்ற இசைக் குறிப்புகளையும் தம் பாடல்களில் பதிவு செய்து, இவ்வகையிலும் தேவார மூவர்க்கும் முன்னோடியாக விளங்கினார். அவற்றிற்கான சில சான்றுகளைக் கீழே காண்போம்.

"துத்தம் கைக்கிளை விளரிதாரம்
உழைஇளி ஓசைபண் கெழுமப்பாடி"

என்று தமிழிசையில் சுரங்களின் பெயர்களைத் தம் மூத்த திருப்பதிகத்தில் பாடுகிறார்.

இதே பதிகத்தில் தமிழிசைக் கருவிகளையும் பட்டியலிடுகிறார்.

“சச்சரி கொக்கரை தக்கையோடு
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளங் கரடிகை வன்கை மென்றோல்
தமருகம் குடமொழா மொந்தை வாசித்து”

என்று பல்வேறு இசைக் கருவிகளின் பெயர்களைப் பட்டியலிடுகிறார்.

தமிழில் அந்தாதி இலக்கியத்திற்கும் அம்மையாரே முன்னோடி. ஆவார். மூத்த திருப்பதிகம் என்றழைக்கப்படும் திருமுறைப் பாடல்களை முதன் மூதல் படைத்திருந்தும் பன்னிரு திருமுறைத் தொகுப்பில் அம்மையாரின் பாடல்கள் பதினோராம் திருமுறையில் ஒரு பகுதியாகக் குறிப்பிடப்பட்டிருப்பது ஒரு வரலாற்று விந்தையே. காரைக்காலம்மையார் தோன்றி பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே திருமுறைகள் பன்னிரு திருமுறைகளாக தொகுக்கப்பட்டு வரைமுறைப்படுத்தப்பட்டன என்பதையும் நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

காரைக்காலம்மையார் வாழ்ந்த காலத்தில் காரைக்கால் சோழ நாட்டைச் சார்ந்த பகுதி. ஆயினும் கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாகக் “காரைக்கால்” புதுவை ஆட்சிப் பகுதியின் ஓரங்கமாகவே திகழ்வதால் தமிழிசையின் முதல் மறுமலர்ச்சிக் காலத்தைத் தொடங்கி வைத்த காரைக்காலம்மையாருக்குச் சொந்தம் கொண்டாடும் உரிமை புதுவை மாநிலத்தவர்க்கு உண்டு. இதன் காரணமாகவே, காரைக்கால் நகரின் மையப்பகுதியில் அம்மையார்க்கு ஓர் ஆலயம் எழுப்பி அதன் வாயிற்பகுதியில் ஒரு கலையரங்கையும் உருவாக்கிக் கலை நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்கின்றனர் புதுவை மாநில மக்கள். புதுவை அரசு கலை, பண்பாட்டுத் துறையும் காரைக்காலம்மையாருக்கு ஆண்டுதோறும் விழா எடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

**இரண்டாம் மறுமலர்ச்சி**

அம்மையாரால் தொடங்கப்பெற்று மறுமலர்ச்சியடைந்த இசைத்தமிழ் 12 ஆம் நூற்றாண்டுகளுக்குப் பின் மராட்டியர், தெலுங்கர் போன்ற பிற மொழி ஆட்சியனரால் மீண்டும் பின்னடைவைச் சந்தித்தது. சீர்காழி மூவர்' என்றும் “தமிழிசை மும்மணிகள்” என்றும் போற்றப்படும் முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப் பிள்ளை, அருணாசலக்கவிராயர் அகியோரால் படைக்கப்பட்ட இசைப் பாடல்கள் மூலம் “கீர்த்தனைக் காலம்” தோன்றியது. இக்காலமே தமிழிசையின் இரண்டாம் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இவர்களில் “இராம நாடகக் கீர்த்தனைகள் இயற்றிய அருணாசலக் கவிராயரே கீர்த்தனை நாடகங்களுக்கு முன்னோடியாக விளங்குகிறார். கவிராயர் புதுச்சேரியோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். இலக்கியப் பணியிலும் இசைப் பணியிலும் ஈடுபட்ட அருணாசலக் கவிராயர் நகை விற்பனையைத் தொழிலாகக் கொண்டவர். இவரது தொழிலுக்கான முக்கியக் கேந்திரமாக விளங்கியது புதுச்சேரி, இதன் மூலம் அன்றைய பிரஞ்சு ஆட்சியாளர் டியூப்ளேயின் முதன்மை ஆலோசகராக விளங்கிய புதுவை அனந்த ரங்கப்பிள்ளையின் நட்பையும் ஆதரவையும் பெற்றார் கவிராயர். இராமநாடகக் கீர்த்தனை அரங்கேற்றத்திற்கு ஆனந்தரங்கப் பிள்ளை பெரிதும் துணைபுரிந்ததுடன் பல வகைகளிலும் அதரவு அளித்து வந்திருக்கிறார். இறுதியாக, தஞ்சை சரபோஜி மன்னரின் உதவியோடு

ISSN: 2582-9513

நிகழ்ந்த அருணாசலக்கவிராயரின் இராம நாடக' அரங்கேற்றத்திற்கு முன்னிலை வகித்தவர்களுள் புதுச்சேரியின் அனந்தரங்கப் பிள்ளையும் ஒருவர்.

(இவர் தமது தொழில் முறமை பற்றி பொன் வெள்ளி கொள்ளும் பொருட்டு, அக்காலத்தில் நயமாக விற்ற புதுவைக்குப் பயணங் கொண்டார்........ இக்கவிராயர் தஞ்சாவூர் சமுஸ்தானாதிபதி ஆகிய துளசிமகாராஜாவின் சபையில் இந்நாடகத்தை அரங்கேற்ற வந்தார். அந்நேரம் தஞ்சைக் கோட்டை சென்ன பட்டணத்து நவாப் ஆகிய மதார்மல்கின் தண்டினால் முற்றிரிக்கையிடப்பட்டிருந்தது. அச்சமய பேதத்தால் புதுவை நகரத்து ஆனந்தரங்கப் பிள்ளையின் சபையில் இதை அரங்கேற்ற வந்தார். அவர் தமக்கு மிகவும் இஷ்டராகிய துளசிமகாராஜா இதைக் கேட்பதற்கு முன் தாம் கேட்டல் கூபாது என்று இவருக்கு நாளு வெகுமதியும் செய்து மணலி முத்துகிருஷ்ண முதலியாருக்குத் தகவுரைப் பத்திரிகையோடு இவரைச் சென்னை புரிக்கு அனுப்பினார்........ அவர் அப்படியே அதைக் கேட்டு இவருக்குக் கணிசமான பரிசோடு மரியாதை செய்தார். பின்பு மதார்மல்க் நவாப்போடு சமாதானப்பட்டிருந்த துளசிமகாராஜாவையும் அப்பால் ஒரு பஞ்சரத்தின மூலமா ஆனந்தரங்கப் பிள்ளையையும் பின்பு உடையார் பாளையத்துத் துரைகள் ஆகிய உவரங்கப்புடையாரையும் இவர் சுண்டு இதை அரங்கேற்றிப் பல நல்வரிசைகளையும் மெய்வரிசைகளையும் அவர்களால் பெற்றார்.[3]

அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனையை முன்னோடியாகக் கொண்டு சில கீர்த்தனை நாடகங்களை ஆனைதாண்டாபுரம் கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றினார். அவற்றுள் தலைசிறந்து விளங்குவது நந்தனார் சரித்திரக் கீர்த்தனை நாடகம் அகும். தமிழ்நாட்டின் இசை வரலாற்றில் இதன் மூலம் பெரும் புரட்சியை ஏற்படுத்தியவர் கோபாலகிருஷ்ண பாரதியார். இவருடைய பாடல்களினாலும் வர்ணமெட்டுக்களினாலும் மிகவும் ஈர்க்கப்பட்டவர்களுள் பாரதியார், சங்கரதாஸ் சுவாமிகள், பாரதிதாசன், புதுவைச் சிவம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பொதுவாக இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இவருடைய தாக்கத்தைப் பெறாத இசைப் புலவர்களே இல்லை எனலாம். அக்காலத்தில் பல இசைப் பாடல்கள் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை வர்ண மெட்டுக்களிலேயே இயற்றப்பட்டன. குறிப்பாக, பாரதியாரின் விடுதலை இயக்கப் பாடல்கள் பலவும் இவ்வர்ணமெட்டுக்களில் அமைந்திருப்பதைக் காணலாம். தமிழ் நாடெங்கும் புகழ் பெற்ற நந்தனார் நாடகம் தொடக்கத்தில் கோபாலகிருஷ்ண பாரதியாராலேயே கதாகாலட்சேபமாக நடத்தப்பட்டு மிகவும் புகழ் பெற்றது. ஆயினும், அதனை அச்சில் கொணரும் எவ்வித முயற்சியும் நடை பெறவில்லை. இக்கீர்த்தனை நாடகத்தின் சிறப்பைப் பற்றிக் கேள்வியுற்ற காரைக்கால் பகுதி ஆட்சியராக இருந்த பிரெஞ்சுக்காரரான ஸிஸே துரை என்பவரின் முயற்சியால் முதன் முதலில் 1848-இல் இந்நாடகம் அச்சில் வெளிவந்தது. அப்பதிப்பின் முகப்புப் பக்கத்தில் காணப்படுவது. “இஃது முடிகொண்டான் பாரதி கோபாலகிருஷ்ணையரால் நூதனமாக இயற்றியதைக் காரைக்கால் கலெக்டர் ஸிஸே துரையவர்களாலும் உத்தரவின் படி மேற்படியூர் ஞானப்பிரகாச பின்ளையவர்களாலும் பிட்டில் அருணாசல பிள்ளையவர்களாலும் பரிசோதித்து புரசை க. குண்ணப்பமூர்த்தி அவர்களால் கல்வி விளக்க அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.”[4] சிந்துப் பாக்களையும் நாட்டுப்புறப் பாடல் வகைகளையும் இந்நாடகத்தில் ஆங்காங்கே பயன்படுத்தியதன் மூலம் கோபாலகிருஷ்ண பாரதியாரே சிந்துப் பாடல்களை இயற்ற பாரதியாருக்கு முன்னோடியாக விளங்கினார். இசைத்தமிழ், நாடகத்தமிழ்

ISSN: 2582-9513

வரலாறுகளில் மிகவும் மேன்மையான இடம் பெற்.றுன்ள இராம நாடகம், நந்தனார் சரித்திர நாடகம் இவை இரண்டும் வெளிப்பட்டதில் இசைத்தமிழின் இரண்டாம் மறுமலர்ச்சியிலும் புதுவைக்கு மகத்தான பங்களிப்பு உண்டு.

**மூன்றாம் மறுமலர்ச்சி**

தமிழிசை வரலாற்றின் மூன்றாம். மறுமலர்ச்சிக் கட்டமாக 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் நாட்டில் தோன்றிய தமிழிசை இயக்கத்தைக் கூறுவர். தமிழிசை இயக்கம் எனும் ஆலமரம் வளர்வதற்கான வித்து அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே மகாகவி பாரதியாரால் .புதுவையில் விதைக்கப்பட்டது. "தமிழ்நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால் திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுக்களை வருஷக்கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தோற்காது (தோல் காது) உள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்............ கீர்த்தனங்களெல்லாம் ஸமஸ்கிருதம் அல்லது தெலுங்கு பாஷையில் இருக்கின்றன. ஸங்கீத வித்வான் களிலே தலைமைப் பட்டி ருப்போர் தமிழிலே புதிய மெட்டுகளில் கீர்த்தனங்கள் செய்ய முயல வேண்டும் என்று தமிழிசை இயக்கம் தோன்றுவதற்கான சிந்தனையை முதன் முதல் விதைத்ததுடன் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டுமிருந்தார் பாரதியார். அவரே முன்னின்று பல வர்ணமெட்டுகளில் ஏராளமான இசைப் பாடல்களை இயற்றினார். நண்பர்களுக்குப் பாடியும் காட்டினார். பாரதியின் கண்ணன் பாட்டும், விடுதலை இயக்கப் பாடல்களும், பிற தனிப்பாடல்களும் இசைத்தமிழ்க் கருவூலங்களாகும். இசைத்தமிழின் தொடக்கமான சிந்து வகைப் பாடல் முதல் இன்றைய உருப்படி என்னும் கீர்த்தனைகள் வரை அனைத்து பாடல் வகைகளையும் கொடையாக வழங்கியவர். நம். மசுசகவி. இவை யாவும் நிகழ்ந்ததும், இன்று இசை" மேடைகளில் ஒலிக்கும் பல பாடல்கள் புனையப்பட்டதும் இப்புதுவை மண்ணில் தான் என்பது வரவாறு.

அவர்தம் வழி நின்று தமிழிசை இயக்கத்தில் பெரும் பங்காற்றியவர் புதுவை மண்ணின் மைந்தரான பாவேந்தர் பாரதிதாசன். அவருடைய படைப்புகளைப் பொதுவாக இயற்றமிழ் பாக்கள், இசைத்தமிழ்ப் பாக்கள், நாடகங்கள் என வகைப்படுத்தலாம். அவற்றுள் இசைத்தமிழ்ப் பாக்கள் வருமாறு: இசையுடன் பாடத்தக்க வெண்பா, கலிப்பா, அசிரியப்பா, கழிநெடிலடி விருத்தங்கள், சிந்து, சந்தம், வண்ணம், உருப்படிகள் ஆகியன. தமிழிசை மரபு வழிப்பட்ட இப்பா வடிவங்கள் அனைத்திலும் பாரதிதாசன் பாடல்களை இயற்றியுள்ளார். இசைத்தமிழ் நோக்கில் அவற்றைக் கீழ்க்காணும் வண்ணம் வகைப்படுத்தலாம்.

1. வண்ணப்பாடல்கள்
2. சந்தப்பாடல்கள்
3. சிந்துப்பாடல்கள்
4. கீர்த்தனைகள்
5. வர்ண மெட்டுகளில் அமைந்த பாடல்கள்
6. மொழிபெயர்ப்புக் கீர்த்தனைகள்
7. இராக தாளம் குறிக்கப் பெற்ற பாடல்கள்
8. நாட்டுப்புறப் பாடல்கள்

இப்பாவகைகள் இடம் பெற்றுள்ள நூல்கள் வருமாறு :

மயிலம் ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது,

மயிலம் ஸ்ரீ ஷண்முகன் வண்ணப்பாட்டு

இசையமுது

பன்மணித்திரள்

தேனருவி இசைப் பாடல்

திரைப்படப் பாடல்கள்

பலரும் பாடுவதற்காகவே "இசையமுது" பாடற் தொகுப்புகளை எழுதி வெளியிட்டார். இறவா வரம் பெற்று இசைவானில் ஒளிர்கின்ற துன்பம் நேர்கையில் யாழெடுத்து. 'வெண்ணிலாவும் வானும் போலே போன்ற பாடல்கள் தமிழிசைக்குப் புது வரவாக அமைந்தன. தெலுங்கில் உள்ள கீர்த்தனைகளுக்கு இணையாகத் தமிழில் இசை வளத்துடன் பாடத் தகுத்த பாடல்கள் இல்லை என்று இசை வாணர்கள் கூறி வந்தனர். இக்குறையைப் போக்கும் வண்ணம் எவ்வாறாயினும் முன்னணி இசைக் கலைஞர்களை தமிழில் பாடவைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இசை மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜரின் புகழ் வாய்ந்த கீர்த்தனைகள் சிலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்து அதே இசை வடிவத்தில் (வர்ண மெட்டில்) எழுதினார். இப்பாடல்கள் யாவும் பாவேந்தர் அந்நாளில் வெளியிட்டு வந்த ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் என்னும் கவிதைத் திங்களிதழில் வெளியிட்டுள்ளார். அவை வருமாறு:

| | | |
|---|---|---|
| நிஜமர்மமுலனு | - | நிசமர்மமதை அறிந்துள்ள |
| மருகேலரா | - | மறைவென்னகாண் |
| ஸரஸ எமாமதான | - | ரசிகனேநற் சாம தான (ஆவணி, 7935) |
| மனஸா ஸ்ரீ ராமசந்த்ருனி | - | மனசேஸ்ரீராமசந்த்ரனை (புரட்டாசி, 1935) |
| த்ஸனிதோடி தேவே | - | ததிகூட்டிவாராய் (ஐப்பசி, 235) |
| ராகஸுதாரஸபானமு | - | ஒர் இசையாம் அமுதார்ந்திவண் |
| இதர தெய்வ முல | - | இதரதெய்வமெனில் (சித்திரை,1935) |
| அலக லல்ல வாடககநி | - | இலகுகுஞ்சிசூழ்முகம் கண்டே |
| ப்ருந்தாவன லோல | - | ப்ருந்தாவனலோல (வைகாசி, 7935) |
| ச்யாம சுந்தராங்க | - | நீலவண்ணாம்வாய்ந்தோய் |
| துளசி பில்வமல்வி | - | துளசிவில்வம் மல்லிகை (ஆனி-ஆடி, 235) |

இவை மட்டுமின்றி இராக, தாளங்கள் குறிப்பிட்டும் பல பாடல்களைக் கீர்த்தனை வடிவில் படைத்துள்ளார். இசைத்தமிழின் அனைத்துப் பா வகைகளிலும் பாவேந்தர் பாடல்களைப் புனைந்துள்ளார்.

மேலும், ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலத்தில் சுத்தானந்த பாரதி, சிவப்பிரகாசம், எஸ்.ஆர். சுப்பிரமண்யம், சாமி சிதம்பரனார், சமுத்தர. நாராயணன், மு.த. வேலாயுதம் முதலான பல கவிஞர்களின் இசைப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இவ்வகையில் இசைத்தமிழுக்கு பாரதிதாசனின் கொடை மிகவும் குறிப்பிடத்தக்கது. புதுவை மண்ணிற் பிறந்தவர்களும் பாவேந்தர் பாசறையைச்

ISSN: 2582-9513

சார்ந்தவர்களுமான வாணிதாசன், புதுவைச் சிவம் ஆகியோரும் பல இசைப் பாடல்களைப் படைத்துள்ளனர். குறிப்பாக, புதுவைச் சிவம், பாவேந்தரைப் பின்பற்றி அக்காலத்தில் பிரபலமாக விளங்கிய தியாகராஜ கீர்த்தனைகள், சங்கரதாஸ் சுவாமிகள் நாடகப் பாடல்கள், பிற நாடகப் பாடல்கள் சிலவற்றின் வர்ண மெட்டுகளில் தனிப் பாடல்களையும் பல நாடகப் பாடல்களையும் இயற்றியிருக்கிறார். பல பாடல்களுக்கு இராக தாளமும் குறித்துள்ளார். ஏராளமான இசைப் பாடல்களை இயற்றியுள்ள புதுவைகீ சிவம் இசைத் தமிழுக்குப் பெரும் கொடையளித்துள்ளார். இவரைத் தமிழுலகம் இசை நோக்கில் முழுமையாக அறிந்து கொள்ளவில்லை என்பது வருந்துதற்குரியது.

தமிழ்க் கவிதை வரலாற்றில் மறக்கப்பட்ட மற்றுமொரு எழுச்சிக் கவிஞர் தமிழொளி ஆவார். புதுவையில் பிறந்து நிறைய எழுதிக் குறைந்த காலமே வாழ்ந்தவர் இக்கவிஞர் பொதுவுடைமையில் ஊறித் திளைத்து புரட்சிக் கனவைத் தம் படைப்புகளில் வெளிப்படுத்தியவர். இவருடைய படைப்புகளில் இசையமைத்துப் பாடத்தக்க இசைப் பாடல்களும் உள்ளன. புதுவையிலேயே பிறந்து, வாழ்ந்து, மறைந்து போன இப்பெருங்கவிஞன் தமிழொளிக்கு புதுவை மாநில முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பெருமுயற்சியினால் கடந்த சில அண்டுகளாக புதுவை அரசு கலை, பண்பாட்டுத் துறை சார்பில் அண்டுதோறும் விழா எடுக்கப்பட்டு கருத்தரங்கும், கவியரங்கும், இசையரங்கும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

கோபாலகிருஷ்ண பாரதி, பாபநாசம் சிவன் போன்று தமிழிசைக்கு நூற்றுக் கணக்கான, இனிமையான, எளிமையான பாடல்களைப் படைத்து வழங்கிய கவியோகி சுத்தானந்த பாரதி தம் வாழ் நாளில் பெரும் பகுதியைக் கழித்ததும், பல பாடல்களை இயற்றியதும் புதுச்சேரியில் தான் என்பது பவரும் அறிந்த செய்தி. அவர் பாடாத பொருளே இல்லை. தேவாரப் பண்கள் பற்றியும், “இசையியல்” குறித்தும் நூல்கள் எழுதியுள்ளார். “கீர்த்தனாஞ்சலி”, “சங்கீதாஞ்சலி”, “நடனாஞ்சலி” ஆகிய நூல்களில் ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்களை எழுதியுள்ளார். 555 இன்னிசைப் பாடல்களைக் கொண்ட கர்த்தனாஞ்சலி நூல் 1947 இல் புது யுக நிலையம், புதுச்சேரி என்ற பெயரில் முதற் பதிப்பாக வெளிவந்துள்ளது. இதில் அனைத்துப் பாடல்களும் இராக, தாளம் குறிக்கப்பட்டவை. தமிழ்த்தாய்க்குத் திருவெம்பாவை பாடியவர். தமிழிலேயே பாட வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தி,

“எண்ணுறும் போது தமிழையே எண்ணி
இசைத்துழி தமிழையே இசைப்பீர்
பண்ணுறும் போது தமிழையே பண்ணீர்
பாடுறும் போது தமிழையே பாடீர்”

என்று தொடங்கும் பாடலை இயற்றினார். தமிழிசை இயக்கத்திற்கு வளமும் பலமும் கூட்டியவர் சுத்தானந்த பாரதி. தமிழிசை குறித்துப் பெரிதும் பேசுபவர்கள் இவரையும் மறந்துவிட்டனர். இருப்பினும் இவர் இயற்றிய அருள் புரிவாய் கருணைக் கடலே “எப்படிப் பாடினரோ” போன்ற பாடல்கள் அழியாப் புகழ் பெற்றவை என்பதில் ஐயமில்லை.

இசையுலகமறிந்த இக்கவிஞர்கள் மட்டுமல்லாது இருபதாம் நூற்றாண்டில் நாடக மேடைகள் மூலம் தமிழிசைக்கு உயிரூட்டிய தமிழ் நாடகத் தந்தை சங்கரதாஸ் சுவாமிகள் நலிவுற்ற போதெல்லாம் அரவணைத்து ஆதரித்ததும் புதுச்சேரி தான். அவரால் வளர்க்கப்பட்ட தமிழ் நாடகக் கலைஞர்களால் கை

ISSN: 2582-9513

விடப்பட்ட நிலையில் உடல் நலிவுற்று புதுச்சேரிக்கு ஜெயராம் நாயுடு அவர்களால் அழைத்து வரப்பட்டார். முதுபெரும் கம்யூனிஸ்டு தலைவர் சுப்பையா அவர்களின் தாய் மாமனான ஜெயராம் நாயுடு சுவாமிகளின் சீடருமாவார். இறுதிவரையில் சுவாமிகளுக்கு ஒரு மகன் போல் விளங்கி அவரைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டவர். இறுதியில் புகழுடல் எய்திய சுவாமிகளுக்குக் கருவடிக்குப்பத்தில் நினைவு மண்டபம் எழுப்பி இன்று வரை சுவாமிகளது நினைவு நாளில் பட உலர்வலம், அஞ்சலி, அன்னதானம் அகியன நடைபெறுவதற்கு வித்திட்டவர் இப்புதுவை மண்ணைச் சார்ந்தவரே எனக் கூறவும் வேண்டுமோ!

சங்கரதாஸ் சுவாமிகளின் ஆசிரியராகவும் குருவாகவும் விளங்கிய “வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்” தமிழில் அறுவகை இலக்கணம் படைத்தவர், வண்ணப்பாவிற்குத் தனி இலக்கணம் படைத்தவர். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வண்ணப் பாடல்களை இயற்றியவர். அவரும் புதுச்சேரியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். அவருடைய மனைவி புதுச்சேரியைச் சேர்ந்தவர்.

அண்மையில் புகழிலெய்திய, இலக்கணச் சுடர் என்று தமிழுலகத்தினரால் அன்புடன் அழைக்கப்பட்ட முதுபெரும் முத்தமிழ் அறிஞர் இரா. திருமுருகன் இசைத்தமிழுக்கும் தமிழிசைக்கும் பெரும் கொடை அளித்துள்ளார். தண்டபாணி சுவாமிகளைத் தொடர்ந்து இசைத் தமிழுக்கான இரண்டாவது இலக்கண நூலை எழுதினார். அந்நூலின் பெயர் “சிந்துப் பாடல்களின் யாப்பிலக்கணம்” அகும்.

**முடிவுரை**

இசைத்தமிழ் வரலாற்றில் புதுச்சேரிக்கு மகத்தான பங்களிப்பு உண்டு என்பதை நிறுவுவதில் ஈண்டு தரப்பட்டுள்ள செய்திகள் யாவும் ஒரு சோற்றுப் பதமே; முழுமையானது அன்று; கட்டுரையளவு சுருதி சுருங்கச் சொல்லப்பட்டிருப்பது வெள்ளிடை மலை.

நிறைவாக ஒரு சுவையான செய்தி. “தமிழ் நாட்டில் ஏன் தமிழில் பாடவில்லை?” என்று முதன் முதலில் கேட்டவர் பிரஞ்சு கவர்னர் டியூப்ளே. கேட்கப் பட்டவர் அனந்தரங்கப் பிள்ளை; கேட்கப்பட்ட இடம் புதுச்சேரி; கேள்வி எழுந்தது இரண்டு நூற்றாண்டுகளுக்கும் முன்பே”.

**அடிக்குறிப்புகள்**

1. வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், தமிழ் மொழியின் வரலாறு, ப. 28, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
2. இரா. திருமுருகன், மூவகைத் தமிழ்கள், தெளிதமிழ், 14-01-2009,ப. 29.
3. அருணாச்சலக்கவிராயர், இராமநாடகம் (சங்கீத இராமாயணம்), பக். 17, 24, S.TR).
4. பிரமீளா குருமூர்த்தி, கோபாலகிருஷ்ண பாரதியார், பக். 58, சாகித்திய அகாடமி, 2003.

**துணைநின்ற நூல்**

1. அரிமளம் சு. பத்மநாபன், தமிழிசையும், இசைத்தமிழும், பக். 270, 284, முதல் பதிப்பு-2009, காவ்யா வெளியீடு.